# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# இரண்டாம் பத்து
# காரணத்வமுடைய கேசவனிடம் 'உனக்கேயாக எனைக் கொள்வதே ஞான பலமான மோக்ஷம்' என்று நிர்ணயித்தல்

## முதல் திருவாய்மொழி - வாயும்திரை
## கலந்த எம்பெருமான் மறைய நிற்க, ஆழ்வார் ஒரு பிராட்டி நிலை அடைந்து அசேதனங்களும் திர்யக்குகளும் தம்மோடு ஒக்கத் துன்புறுவதாக எண்ணிப் புலம்புதல்

** வாயும் திரை உகளும் * கானல் மட நாராய்! *
ஆயும் அமர் உலகும் துஞ்சிலும் * நீ துஞ்சாயால் **
நோயும் பயலைமையும் * மீதூர எம்மே போல் *
நீயும் திருமாலால் * நெஞ்சம் கோட்பட்டாயே 1

கோட்பட்ட சிந்தையையாய்க் * கூர் வாய அன்றிலே! *
சேட்பட்ட யாமங்கள் * சேராது இரங்குதியால் **
ஆட்பட்ட எம்மே போல் * நீயும் அரவணையான் *
தாட்பட்ட தண்துழாய்த் * தாமம் காமுற்றாயே 2

காமுற்ற கை அறவோடு * எல்லே! இராப் பகல் *
நீ முற்றக் கண் துயிலாய் * நெஞ்சுருகி ஏங்குதியால் **
தீ முற்றத் தென்னிலங்கை * ஊட்டினான் தாள் நயந்த *
யாம் உற்றது உற்றாயோ? * வாழி கனை கடலே! 3

கடலும் மலையும் * விசும்பும் துழாய் எம் போல் *
சுடர் கொள் இராப் பகல் துஞ்சாயால் * தண்வாடாய்! **
அடல் கொள் படையாழி * அம்மானைக் காண்பான் நீ *
உடலம் நோய் உற்றாயோ? * ஊழி தோறு ஊழியே 4

ஊழி தோறு ஊழி * உலகுக்கு நீர் கொண்டு *
தோழியரும் யாமும் போல் * நீராய் நெகிழ்கின்ற **
வாழிய வானமே! * நீயும் மதுசூதன் *
பாழிமையில் பட்டு அவன் கண் * பாசத்தால் நைவாயே? 5

நைவாய எம்மே போல் * நாள் மதியே! நீ இந்நாள் *
மை வான் இருள் அகற்றாய் * மாழாந்து தேம்புதியால் *
ஐவாய் அரவணை மேல் * ஆழிப் பெருமானார் *
மெய் வாசகம் கேட்டு * உன் மெய்ந்நீர்மை தோற்றாயே? 6

தோற்றோம் மட நெஞ்சம் * எம்பெருமான் நாரணற்கு * எம்
ஆற்றாமை சொல்லி * அழுவோமை நீ நடுவே **
வேற்றோர் வகையில் * கொடிதாய் எனை ஊழி *
மாற்றாண்மை நிற்றியோ? * வாழி கனை இருளே! 7

இருளின் திணி வண்ணம் * மா நீர்க் கழியே! போய் *
மருள் உற்று இராப் பகல் * துஞ்சிலும் நீ துஞ்சாயால் **
உருளும் சகடம் * உதைத்த பெருமானார் *
அருளின் பெரு நசையால் * ஆழாந்து நொந்தாயே? 8

நொந்தாராக் காதல் நோய் * மெல் ஆவி உள் உலர்த்த *
நந்தா விளக்கமே! * நீயும் அளியத்தாய் **
செந்தாமரைத் தடங்கண் * செங்கனி வாய் எம்பெருமான் *
அந்தாமத் தண்துழாய் * ஆசையால் வேவாயே? 9

வேவாரா வேட்கை நோய் * மெல் ஆவி உள் உலர்த்த *
ஓவாது இராப் பகல் * உன் பாலே வீழ்த்து ஒழிந்தாய் **
மா வாய் பிளந்து * மருதிடை போய் மண்ணளந்த *
மூவா முதல்வா! * இனி எம்மைச் சோரேலே 10

** சோராத எப்பொருட்கும் * ஆதியாம் சோதிக்கே *
ஆராத காதல் * குருகூர்ச் சடகோபன் **
ஓர் ஆயிரம் சொன்ன * அவற்றுள் இவை பத்தும் *
சோரார் விடார் கண்டீர் * வைகுந்தம் திண்ணெனவே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---